## CMO ஆசியா விருதுகள் 2019 இல் Airtel லங்காவுக்கு மூன்று விருதுகள்

- மனிதவளம் மற்றும் வர்த்தக நாமம் தொடர்பான புத்தாக்க செயற்பாடுகளுக்காக அங்கீகாரம்
- இலங்கையின் சிறந்த தொழில் வழங்குனராக HRD Congress இனால் அங்கீகாரம்

இலங்கையின் மிகவும் ஆற்றல் வாய்ந்த தொலைத்தொடர்பு நிறுவனமொன்றாகவும், இலங்கையில் இளம் தலைமுறையினருக்கு விருப்பமான வர்த்தக நாமமாக அதன் நற்பெயரை பலப்படுத்திய Airtel லங்கா, அண்மையில் முடிவடைந்த CMO ஆசியா விருதுகள் 2019 இல் 3 விருதுகளை மொத்தமாக வென்று மற்றுமொரு தனிச் சிறப்பு வாய்ந்த செயலாக்கத்தை நிலை நிறுத்தியுள்ளது.

உலக சந்தைப்படுத்தல் காங்கிரஸின் Sri Lanka Brand Leadership விருதை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் Airtel ஆனது இலங்கையின் சிறந்த தொழில் வழங்குனராக உலக HRD காங்கிரஸினால் விருதினையும் பெற்றுக்கொண்ட அதேவேளை, நிறுவனத்தின் கள விற்பனை தக்கவைத்தல் திட்டம் (FSE) சிறந்த புத்தாக்க மூலோபாயத்துக்கான விருதையும் வென்றுள்ளது.

இந்த வெற்றிகள் தொடர்பில் பார்தி Airtel லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நிர்வாக பணிப்பாளர் ஜினேஷ் ஹெக்டே தெரிவிக்கையில், “Airtel லங்காவில் நாங்கள் வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் திருப்தி என்பவற்றுக்கே முன்னுரிமை வழங்குகின்றோம். எனினும் ஒரு செயற்திறனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் உற்சாகத்துடன் ஊக்கமளிக்கக்கூடிய குழுவொன்று இல்லாமல் இந்த இரண்டையும் சாத்தியப்படுத்த முடியாது. இலங்கையில் வேகமாக வளர்ந்து வரும் தொலைத்தொடர்பு நிறுவனமாக நாம் அனுபவித்து வரும் இந்த வெற்றியானது நாம் மக்கள் மீது செய்துள்ள முதலீடுகளின் நேரடி விளைவாகும் என்பதோடு, வாடிக்கையாளர்களை புரிந்துகொள்வதும் அவர்களுடன் தொடர்புகளை பேணுவதுமாகும். Airtel வென்றுள்ளது. இந்த விருத்திகளை கொண்டு எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் பெறுமதியை சேர்ப்பதனூடாக இன்னும் பல வெற்றிகள் உள்ளதாக நாம் நம்புகின்றோம்.” என குறிப்பிட்டார்.

இலங்கையில் சிறந்த தொழில் வழங்குனர் விருதானது (The Sri Lanka Best Employer Brand Awards) உலக HRD காங்கிரஸ் தொழில்வழங்குனர் வர்த்தக நாம விருதை முன்னிலைப்படுத்தி (World HRD Congress Global Employer Brands) பிராந்திய ரீதியாக வருடாந்தம் இடம்பெறும் விருது வழங்கும் நிகழ்வாகும். இலங்கையில் மனித வளத்துறையில் மிகவும் முன்மாதிரியான நிறுவனங்களிடமிருந்து பங்கேற்பை ஈர்ப்பதோடு, விருது பெறுபவர்கள் விருதுகளுக்கான சமர்ப்பிப்புகளை முன்வைப்பதில்லை. தொழில்துறையில் சிறப்பாக விளங்குபவர்களை உள்ளீர்ப்பதற்கும், அவர்களை தக்க வைத்துக் கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும் நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் யுக்திகள் தொடர்பாக தீவிர மதிப்பீட்டைத் தொடர்ந்து தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

புத்தாக்க வர்த்ததாக நாம சந்தைப்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்பு மூலோபாயங்களை பயன்படுத்தி மற்றும் நிறுவன ரீதியான பெறுமானங்களை கொண்டு நேர்மறையான சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் நிறுவனத்துக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது. இந்த விருதுகள் விசேட ஜூரி சபை மூலம் மதிப்பீடு செய்யப்படுவதோடு உலக நிறுவன சமூக பொறுப்பு தினம் மற்றும் சந்தைப்படுத்தல் நிபுணர்களின் உலக கூட்டமைப்புடன் (World CSR Day and World Federation of Marketing Professionals) இணைந்த ஆய்வொன்றுக்கும் உட்படுத்தப்படுகின்றது.

அண்மைய காலமாக இலங்கையின் இளம் வயதினர் மத்தியில் Airtel இன் ஆதிக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. விஷேடமாக மில்லெனியல்ஸ் (Millennials) மற்றும் ஜென் இஸெட் (Gen Z) பரம்பரையினரின் தேவைகளுக்கு பொருந்தும் தொலைத்தொடர்பு பெக்கேஜ்களை அறிமுகப்படுத்தல் மற்றும் இலங்கை இளைஞர்களிடம் மறைந்து காணப்படும் திறமைகளை தேடிச்செல்லும் “அதிவேகப் பந்துவீச்சாளரை“ அடையாளம் காணும் வேலைத்திட்டம் போன்றன இதற்கு பிரதான காரணிகளாகும்.

இலங்கையில் பணிபுரியக்கூடிய சிறந்த 25 பணியிடங்களின் தரப்படுத்தலுக்குள் வருவதற்கு அண்மையில் Airtel லங்காவுக்கு முடியுமாயுள்ளது. Great Places to Work நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த விருது

Airtel நிறுவனத்தின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய தன்மை உள்ளடக்கிய தன்மை மற்றும் மதிப்பளிக்கின்ற தன்மை ஆகிய கொண்டு வழங்கப்பட்டதோடு Airtel லங்காவின் கள விற்பனை அதிகாரிகளின் அர்ப்பணிப்பும் இதற்கு காரணமாக உள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் தொழில் தகைமைகளை பெற்றுக்கொள்ள Airtel லங்கா பாரிய முதலீடொன்றை மேற்கொண்டுள்ளதோடு தொழில்ரீதியான அபிவிருத்தி வாய்ப்புக்களையும் விரிவாக்கியுள்ளது.

2009 இல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பார்தி Airtel ஆனது ஒரு மில்லியன் வரையான வாடிக்கையாளர்களை அடைந்துள்ள நிலையில் இலங்கையில் காணப்படும் வேகமான தொலைத்தொடர்பு வலையமைப்பாகும். ஆசியாவில் முன்னிலையான கையடக்க தொலைபேசி வலையமைப்பான பார்தி Airtel தொலைபேசிகள் 100 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு தமது சேவைகளை வழங்கிவருகின்றது. இது உலகின் பிரபல்யமான Forbes வர்த்தக சஞ்சிகையினால் உலகின் சிறந்த செயல்திறன் கொண்ட 50 நிறுவனங்களின் தரப்படுத்தலுக்குள் (Asia’s Fab 50 list) பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

CMO ஆசியா நிறுவனமானது சந்தைப்படுத்தல் நிபுணர்களின் அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள ஊக்கமளிக்கும் முழுநேர தொழில்வாண்மையாளர்களால் நடாத்தப்படுகின்றது. CMO ஆசியா இந்த வலைப்பின்னலூடாக ஆசியாவில் தொழிற்துறையில் தீர்மானமெடுக்கும் நபர்கள் மத்தியில் உயர்ந்த அளவிலான சிந்தனை ஆளுமையை மற்றும் நட்பு வட்டமொன்றை அமைப்பதை நோக்காக கொண்டுள்ளது.

**பார்தி Airtel லங்கா தொடர்பில்**

2009 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பார்தி Airtel (Airtel லங்கா) ஒரு மில்லியன் வரையான வாடிக்கையாளர்களை அடைந்துள்ளதோடு இலங்கையில் உள்ள வேகமான தொலைதொடர்பு வலையமைப்பாகும். தமது வர்த்தக பணிகளை ஆரம்பித்த 2009 ஆம் ஆண்டு முதல் மூன்று வருட குறிகிய காலத்தில் Airtel இலங்கையில் அனைத்து பகுதிகளுக்கும் வியாபித்ததுடன் தற்பொழுது முழு இலங்கைக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது. இலங்கை முதலீட்டு சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள Airtel குரல் மற்றும் இணைய சேவைகளை வழங்கும் டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கிவருகின்றது. மேலும் அறிய, www.airtel.lk எனும் இணையத்தளத்துக்கு பிரவேசியுங்கள்.